தென்மேற்கே புளியந்தோப்புப் பாதை இன்னும் திறந்துவிடப் படாமல் இருக்கிறது. விரைவில் அந்தப் பாதையைப் பயன் படுத்தும் முறையில் திறந்து வைக்கவும், கைப்பிடிச் சுவர் கட்டவும் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: என்னிடத்தில் இருக்கும் தகவல்படி அந்த மேம்பாலம் 1972 ஏப்ரல் மாதம் திறந்துவிடப் பட்டதாகத் தகவல் இருக்கிறது. மேற்கொண்டு அங்கத்தினர் விவரம் தந்தால் விசாரிக்கப்படும்.

இரயில் வண்டிகளுக்கு டீஸல் இன்ஜின்கள்

*** 613 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழகத்தில் ஓடும் முக்கிய இரயில் தடங்களில் டீஸல் இன்ஜின்கள் பொருத்தப்பட வேண்டுமென அண்மையில் நமது அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இன்றைய தினம் 'ஏர் பொல்யூஷன்' பற்றி உலகத்தில் இருக்கும் எல்லா நாட்டுக் காரர்களும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரத்தில் மக்கள் தொகை அதிகம். ரயில் போகின்ற ஓரங்களில் எல்லாம் வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ரயில் போகின்றபோது புகை ஏராளமாக கக்கப்பட்டு அங்கிருக்கக்கூடிய மக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. சென்னை நகரத்தில் இருந்து தாம்பரம் வரையிலாவது டீசல் எஞ்சின் போட வேண்டு மென்று மத்திய அரசுக்கு நம்முடைய அரசு பரிந்துரைக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மின் இணைப்பில் இணைக்கப் பட்ட பாதை அது 'ஏர் பொல்யூஷன்' பற்றி மட்டுந்தான் அங்கத்தினர் அவர்கள் பார்த்திருக்கிறார்கள். டீசல் எண்ணெய் பற்றாக்குறையையும் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.